பக்கங்கள் 18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 24 திங்கட்கிழமை 07.04.2025 | அதிர்வு 245

## திடீர் மாரடைப்புக் காரணமாக இளம் எம்.பி. கோசல நேற்று காலமானார்!



தேசிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் கோசல நுவன் ஜயவீர நேற்று 03▶




# ஜி.எஸ்.பி. பிளஸும் இல்லாமல் போகும்!

## அரசுக்கு ஹர்ஷ டி சில்வா எம்.பி. எச்சரிக்கை

“அமெரிக்காவினால் கதவுகள் அடைக்கப்படும்போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் கதவுகள் திறக்கப்படும் என்று எவராவது எண்ணினால் அது முற்றிலும் தவறாகும். ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டத்துடன் புதிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வரவுள்ளது. அதற்கமைய தற்போது ஜி.எஸ்.பி. பிளஸ் கிடைக்கப் பெறும் சுமார் 6 நாடுகள் அதனை இழக்க நேரிடும்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயம் மற்றும் இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் அடுத்த நாடாளுமன்ற அமர்வுகளில் கேள்வியெழுப்ப எதிர்பார்க்கின்றோம். 03▶

## மட்டக்களப்பில் மகன் தாக்கி தாய் மரணம்!

மட்டக்களப்பில் பெண்ணொருவர் தனது வீட்டு வளவில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடி – கேணி நகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது. 03▶

## விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் மீது கார் மோதியதில் 5 வயது சிறுமி உயிரிழப்பு!



வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த மூன்று சிறுவர்கள் மீது கார் மோதியதில் 5 வயது சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மேலும் சம்பவத்தில் படுகாயமடைந்த இரண்டு சிறுவர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா, மாபாகே பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வெலிசறை ஜேகொப் 03▶




யுத்த காலத்திலும், யுத்தத்துக்கு முந்திய காலத்திலும், யுத்தத்துக்கு பிந்திய காலத்திலும் ஏறத்தாழ 46 ஆண்டுகள் ஈழத் தமிழ் ஊடகத்துறையில் நான் பயணிக்கிறேன்.

இப்போது புதிதாக ‘சமூக ஊடகங்கள்’ என்ற பெயரில் தோற்றம் பெற்றுள்ள பதில் கூறக் கடமைப்பாடு இல்லாத – பொறுப்புக் கூறல் பற்றிய விவஸ்தையே கிடையாத – அநாமோதய – ஊடகங்கள் தொடர்பில் நான் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. பொது வெளியில் இருக்கும் எங்களைப் போன்ற ஊடகவியலாளர்களை அபவாதமாக குற்றம் சுமத்தி, தான்தோன்றித்தனமான கருத்துக்களை வெளியிடும் தரப்புகள் குறித்து நான் அதிகம் கவனம் எடுப்பதில்லை.

நமது சமூகச் சூழலில் – குறிப்பாக யாழ்ப்பாணத்தை ஒட்டிய கலாச்சாரத்தில் வளர்ந்த யாழ்ப்பாணத்தவர்களும், புலம் பெயர்ந்தவர்களும் – 02▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

அத்தகைய சமூகப் பொறுப்பற்ற – பொறுப்பு கூறும் கடப்பாடற்ற – தங்களை யார் என்று அடையாளப்படுத்தாத – அநாமோதய சமூக ஊடகங்கள் குறித்தும் அவற்றில் வெளியாகும் ஆதார மற்ற புனைகதைகள் குறித்தும் அதிகம் மென்று விழுங்கி, அவற்றைச் சப்பி துப்பிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், அவற்றை வேதனை யோடு அவதானித்து ஒதுங்குவதை மட்டுமே என் வழக்கமாகக் கொண்டிருக்கி றேன்.

ஆயினும் கடந்த ஓரிரு தினங்களாக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரன் கட்சிக்குள் தனி வழி போகின்றார் என்ற விடயங்களை சில சம்பவங்களோடு குறிப்பிட்டு நான் சுட்டிக் காட்டிய போது, இத்தகைய சமூக ஊட கங்களில் ஒரு பிழையான – தவறான – பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது. அவை தொடர்பில் உண்மையை வெளிப் படுத்துவது அவசியமானது என்று கருது கிறேன்.

நான் சில விடயங்களை சுட்டி காட்டித் தான் சிறிதரன் தனி வழி போகின்றார் என்று குறிப்பிட்டேன். அதற்காக நான் ஊடக விபசாரம் செய்கிறேன் என்று அந்த சமூக ஊடகங்கள் விழுந்தடித்து சேறு பூச முயல்கின்றன.

இவர்களில் பலர் பிறக்க முன்னரே, இராணுவத்தின் பிடியிலிருந்த யாழ்ப் பாணத்திலும், கொழும்பிலும் இருந்து கொண்டு விடுதலைப் புலிகளின் போராட்ட நியாயங்களுக்கு ஆதரவாக தமிழ் தேசியத்தை பிரதிபலித்து ஆக்ரோஷ மாக எழுதியவன் நான். அதற்காக என் குடும்பத்தவர் முன்னிலையிலே கேவ லமான முறையில் நடத்தப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, பின்னால் கைவிலங்கிடப்பட்டு, தாக்கப்பட்டு, ஆயுத முனையில் உடுப்பு களின்றி கடத்தப்பட்டவன். பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கீழ் மூன்று மாதங்க ளுக்கு மேல் தடுப்பு காவலில் மனச் சிதைவுக்கு உள்ளாகும் அளவுக்கு சித் திரவதைகளை – நெருக்குவாரங்களை – எதிர் கொண்டவன். பல தடவைகள் கொலை முயற்சிகளுக்கு இலக்கானவன். அப்போதும் சரி, அதற்கு முன்னரும் சரி, விடுதலைப் புலிகளிடமிருந்தோ, வேறு தரப்புகளிடமிருந்தோ எந்த ஓர் உதவி யையும் பெறாதவன் நான். இப்போது சுமந்திரனின் சம்பளத்தில் நான் பணி யாற்றுகிறேன் என தங்களின் வாய்க்கு வந்ததை இந்த பிரசாரத்தில் பயன்படுத் துகிறார்கள் இந்தப் பேடிகள்.

2009 இல் நான் கடத்தப்பட்ட சமயம் என்னை நீதிமன்றத்திற்குக் கொண்டு வரச் செய்வதற்காக என் மனைவி தாக் கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவின் மீது – என்னை முன்பின் தெரியாத அந்த வேளையிலே – எனக் காக உயர்நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிட்டவர் சுமந்திரன். அதைத் தவிர, ஓர் ஊடகவியலாளனாக அவரைச் சந் தித்த சமயங்களில் கூட இருந்து தேநீர் அருந்தி இருப்பேன், சாப்பிட்டு இருப் பேனே தவிர, அவர் எனக்கு எந்த வகை யிலும் நிதி ஆதாயம் தருபவர் அல்லர்.

தலைவர் பிரபாகரன், மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம், அரசியல் பொறுப் பாளர்கள் தமிழ்ச்செல்வன், நடேசன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபா, ரெலோத் தலைவர் சுந்தரம் சிறிசபாரத் தினம், ஈரோஸ் தலைவர் பாலகுமார், ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவா னந்தா, தமிழரசு தலைவர்கள் அமிர்த லிங்கம், யோகேஸ்வரன், சம்பந்தன், கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம், ஆனந்தசங்கரி மற்றும் தேசிய மட்டத் தலைவர்களான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, ஹக்கீம், மனோ கணேசன் போன்று சுமந்திரனுடனும் சிறிதரனுடனும் எனக்கு ஊடகவியலாளன் என்ற முறை யில் நெருங்கிய பழக்கமும் பரிச்சயமும் உண்டு.

புலிகளிடம் எப்படி எந்தத் தனிப் பட்ட வசதிகளையும் நான் பெற்றுக் கொள்ளவில்லையோ அதுபோன்றே இலங்கை அரசிடமோ அல்லது சுமந் திரன் போன்றோரிடமோ நான் தனிப்பட்ட உதவிகளைப் பெற்றுக் கொண்டவன் அல்லன்.

இந்த வகையில் பார்த்தால் என்னோடு நெருங்கி உதவியளித்த நண்பராக – உற்றவராக – சிறிதரனைத்தான் நான் கூற வேண்டும். சிறிதரன் மாத்திரமல்லர், அவரின் குடும்பத்தவர்களும் எனக்கு மிக நெருக்கமானவர்களே – இன்றும் கூட.

ஆனால் இந்த நட்பும் தனிப்பட்ட உறவும் ஊடகவியலாளர் என்ற முறை யில் வேறுபட்டவை.

இன்னும் ஆழமாகக் கூறுவதானால் என்னுடைய தனிப்பட்ட அரசியல் இலக்குகள், விருப்புகள், அபிலாசை களில் சுமந்திரனை விட என்னோடு நெருக்கமாக இருப்பவர் – எனக்காகக் குரல் எழுப்புபவர் – சிறிதரன் என்று கூறலாம். அது தனிப்பட்ட விடயம். அது சிறிதரன் எம்.பிக்கும் நன்கு தெரியும். நாங்கள் முரண்பட இயைந்தவர்கள். We always agree to disagree.

இவையெல்லாம் என் பத்தி தொடர் பில் திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் இப்போதைய பிரச்சாரத்திற்கு எதிரான சில தெறிப்புகள்தான்.

நான் ஊடக விபசாரம் செய்கிறேன் என்று பிரசாரம் செய்பவர்களுக்கான சில தகவல்கள்தான். அவ்வளவே.

சிறிதரன் எம்.பி. சுமந்திரனோடு சேர்ந்து செயல்படவில்லை என்பது எனது குற்றச்சாட்டு அல்ல. கட்சியோடு ஒன்று பட்டு செயல்படவில்லை என்பதுதான் நான் குறிப்பிட்ட விடயம். அதற்கு உதாரணங்களையும் தந்திருந்தேன்.

பிரதமர் மோடியின் வருகையையொட்டி இந்தியத் தூதரகத்திற்கு தமிழரசுக் கட்சி சார்பில் அதன் செயலாளர் என்ற முறை யில் சுமந்திரன் எழுதிய கடிதத்தின் பிரதி ஊடகவியலாளர் என்ற முறை யில் என் பார்வைக்குக் கிட்டியது. அதில் இந்திய பிரதமரைச் சந்திக்கத் தங்கள் கட்சிக்கு வாய்ப்புத் தருமாறு மட்டுமே சுமந்திரன் கோரியிருந்தார். இந்தியத் தூதரக வட்டாரத்தில் எனக்கு கிடைத்த தகவல்களின்படி – தமிழரசு கட்சியின் தலைவரும், செயலாளரும் குறிப்பிட்ட கட்சியின் பிரதிநிதிகள் நால்வருக்கே சந்திப்புக்கு இடம் அளிக்கப்பட்டது. தூதரக வட்டாரங்கள் அதனைத்தான் கூறுகின்றன. கட்சியின் தலைவர், செயலா ளர், கிழக்கு மாகாணத்திலிருந்து ஓர் எம்.பி., வடக்கு மாகாணத்தில் இருந்து ஓர் எம்.பி. என்ற அடிப்படையில் நால்வரின் பெயர்களை சுமந்திரன் பிரேரித்தார். அவர்களுக்கே இடம் அளிக்கப்பட்டது என்பது தூதரகத் தகவல்.

கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் என்ற முறையில் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் எட்டு பேருக்கும் சந்திப்புக்கு அனுமதி கோரி சிறிதரன் கடிதம் அனுப்பி இருக்கலாம். அதன் பிரதி எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அதை நான் மறுக்கவில்லை.

'அத்துடன் மோடியுடனான கூட்டத்தில் சிறிதரன் தமிழ் இனம் சார்பாக அவ சியமான கருத்துக்களை முன் வைத் திருந்தார்' என்றும் அந்த சமூக ஊட கங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. அது முற்றிலும் தவறானது. தமிழரசுக் கட்சி சார்பில் பங்கு பற்றிய சுமந்திரன் தவிர்ந்த மற்றைய மூவரும் – தலைவர் சி.வி. கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப் பினர்கள் சிறிதரன் மற்றும் சாணக்கியன் யாருமே – அந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கவில்லை. அது கூட்ட ஏற்பாட் டிலும் இடம்பெற்றிருக்கவில்லை. கூட்டத் தின் போது ஆங்கில – ஹிந்தி மொழி பெயர்ப்பு மாத்திரமே இருந்தன. இந்த பின்புலத்தில் தமிழ் இனம் சார்ந்த அவசி யமான விடயங்களை அக்கூட்டத்தில் சிறிதரன் கூறினார் என்பது முற்றிலும் தவறான பதிவு. நிச்சயமாக சிறிதரனின் சம்பந்தமில்லாமல் இந்தப் பதிவு வெளியாகி இருக்கும் என்றே நினைக் கிறேன்.

* * *

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமது நான்காவது இலங்கை விஜயத்தை நேற்று வெற்றிகரமாக முடித்துக் கொண் டிருக்கிறார்.

முன்னைய மூன்று விஜயங்களுடன் ஒப்பிடுகையில் இந்த விஜயத்தில் பல வேறுபாடுகள் உண்டு.

அவற்றில் ஒன்று – இம்முறை ராஜ பக்ஷக்கள் எவரையும் அவர் இலங்கை யில் சந்திக்கவில்லை. முன்னைய மூன்று விஜயங்களிலும் ராஜபக்ஷக்களை அவர் சந்திக்கத் தவறவில்லை.

ஆனால் நேற்று இலங்கை விஜ யத்தை முடித்துக் கொண்ட இந்திய பிரத மர் நாளை அல்லது மறுதினம் புதுடில் லியில் இப்போது ராஜபக்ஷக்களில் முன்னணியில் இருக்கும் இளம் தாரகை யான நாமல் ராஜபக்ஷவைச் சந்திக்கக் கூடும் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

நாளையும் மறு தினமும் புதுடில்லை யில் 'Rising Bharat' (உதய மாகும் பாரதம்) என்ற தலைப்பில் ஒரு சர்வதேச மாநாடு நடைபெறுகிறது. மாநாட் டின் கருப்பொருள்:- இளமை இலட்சி யங்கள். இலக்கு வையுங்கள். சாதி யுங்கள். உயருங்கள். (Youthful Aspirations. Aspire. Achieve. Ascend.) என்பதாக அமைகிறது.

அதில் பங்கு பற்றுவதற்காக நாமால் ராஜபக்ஷ எம்.பியும் அவரது மொட்டுக் கட்சியின் வடக்கு அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கமும் இன்றிரவு புதுடில்லி பயணமாகிறார்கள்.

நாளை மறுதினம் இரவு அவர்கள் அங்கிருந்து தாயகம் திரும்புவதற்கு முன்னர் புதுடில்லியில் முக்கிய தரப்பு களைச் சந்திக்க இருக்கிறார்கள்.

அவர்கள் பங்கு பற்றும் இரண்டு நாள் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, போக் குவரத்து நெடுஞ்சாலை துறை அமைச் சர் நிதின் கட்கரி போன்ற பலர் பங்கு பற்றுகின்றார்கள் என்றும் கூறப்படு கின்றது.

ராஜபக்ஷக்களுக்கும் மோடிக்கு இடையில் ஓர் அரசியல் ஊடாட்டம் இழை யோடுவது உண்மைதான் போலும்.

# வடக்கு ஆளுநருடன் பிரதி அமைச்சர் பல விடயங்கள் குறித்து கலந்தாய்வு



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சத்துரங்க அபயசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

சிறுதொழில் முயற்சியாளர்களுக்குப் பொருத்தமான காணிகளை அடையாளப்படுத்தி வழங்குமாறு பிரதி அமைச்சர், ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தார். அத்துடன் வடக்கு மாகாணத்தில் மாணவர்களின் கல்வித்தரம் மற்றும் தொழில் கற்கைகளை நோக்கிய மாணவர்களின் ஆர்வம் தொடர்பாகவும் பிரதி அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

மேலும், நெல் கொள்வனவுக்கான வங்கிகளின் கடன் வசதிகளை அதிகரிப்பு தொடர்பாக ஆளுநர் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிரதி அமைச்சர், அது தொடர்பில் விரிவாக ஆராய்வதாகவும் குறிப்பிட்டார்.

விவசாய மற்றும் கடல் உணவுகளின் உற்பத்திகளைப் பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதற்கான தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஆளுநர் வலியுறுத்தினார்.

அதனைப் பிரதி அமைச்சர் ஏற்றுக்கொண்டதுடன், எதிர்காலத்தில் தமது அமைச்சின் ஊடான வேலைத்திட்டங்களை வடக்கில் விரிவாக முன்னெடுப்போம் என்றும் அவர் ஆளுநரிடம் உறுதியளித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### விளையாடிக்கொண்டிருந்த...

மாவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாற்று வீதியினூடாக வந்த கார் ஒன்று வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த மூன்று சிறுவர்கள் மீது மோதியுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவர்கள் மூவரும் ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும், படுகாயமடைந்த சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

5 வயதுடைய வெலிசறை, ராகமை பகுதியைச் சேர்ந்த சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த ஏனைய சிறுவர்கள் தொடர்ந்தும் ராகமை வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்துக்குக் காரணமான காரின் பின்புறம் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியுள்ளதுடன், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்டார்.

இதன்போது மாற்று வீதியில் சென்ற மோட்டார் சைக்கிளைப் பின் தொடர்ந்து வந்த கார் இடது புறம் திரும்பிய நிலையில் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் மீது மோதியுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மேலும் சம்பவத்தின் பின்னர் கார் சாரதி காரை சம்பவ இடத்திலேயே கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதுடன், சந்தேகநபர் தொடர்பில் மாபாகே பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### இளம் எம்.பி....

ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

திடீர் மாரடைப்பு காரணமாக அவர் கரவனெல்ல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழக்கும்போது நாடாளுமன்ற உறுப்பினர் கோசல நுவன் ஜயவீரவுக்கு வயது 38 ஆகும்.

### ஜி.எஸ்.பி...

கைசாத்திடப்பட்டப்பந்தங்கள் தொடர்பில் தெரிந்துகொள்வதற்கான உரிமை சகலருக்கும் உள்ளது.

இந்தியப் பரவாலக்கத்தைக் கடுமையாக எதிர்த்த குழுவொன்று இன்று இந்தியப் பிரதமருக்கு பிரம்மாண்ட வரவேற்பளித்து அவருக்கு இலங்கையில் வழங்கப்படும் அதியுயர் கௌரவ நாமத்தையும் வழங்கியிருக்கின்றமை உண்மையில் மகிழ்ச்சியளிக்கின்றது. இலங்கைக்கு மிக அருகிலுள்ள பாரிய பொருளாதார சக்தி இந்தியாவாகும்.

தென்னிந்தியாவின் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா மற்றும் ஆந்ரா ஆகிய மாநிலங்கள் அடுத்த தசாப்தத்தில் உலகில் மிக வேகமாக அபிவிருத்தியடையும் வலயமாக அமையும். இவற்றின் இந்தத் துரித அபிவிருத்தியில் பயன்பெறுவதற்கு எமக்கு சிறந்த வாய்ப்பிருக்கின்றது. எவ்வாறிருப்பினும் அதற்கான முன்னெடுப்புக்களுக்கு தமது சிந்தனையை மாற்றிக்கொள்ள வேண்டும்.

இந்த அரசு ஆட்சியமைத்ததில் இருந்து சுவர்களை உடைத்து, பாலங்களை அமைக்குமாறு நான் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றேன். அவ்வாறு சுவர்களை உடைத்து, பாலங்களை அமைத்தவர்களுக்கு அமெரிக்காவால் தடை விதிக்கப்படவில்லை. மாறாக பாலங்களை உடைத்து சுவர்களை அமைத்தவர்களுக்குத் தடையிருக்கின்றது. இதன் மூலம் நாம் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

வருடாந்தம் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கு அரச குழுவொன்று செல்வது வழமையாகும். இதன்போது அமெரிக்காவின் வரி குறித்து பேசப்படப் போகின்றதா என்பது எமக்குத் தெரியாது. நாணய நிதியத்தில் இருப்பதால் எமக்கு நிவாரணம் வழங்குமாறு கோரினால் அதனை ஏற்கக் கூடியவரல்ல ட்ரம்ப்.

வியட்நாம் ட்ரம்பிடம் முன்மொழிந்துள்ளதைப் போன்று அசாதாரணமான வாய்ப்பொன்றை வழங்கினால் வரி குறைப்பு குறித்து சிந்திக்க முடியும் என்று அமெரிக்கா கூறுகின்றது. அவ்வாறெனில் அந்த அசாதாரணமான வாய்ப்பு என்ன என்பது குறித்து அரசும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சும் தீர்மானிக்க வேண்டும்.

பிராந்திய பொருளாதார ஒப்பந்தங்களுக்குச் செல்லாமல் நாட்டுக்குத் தேவையான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது. சிந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் எம்மால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் ப்ளூ பிரின்ட் வெளியீட்டில் இது தொடர்பில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

இந்தியப் பிரதமருடன் தற்போது பேச வேண்டிய மிக முக்கிய காரணி எக்டாவாகும். பொருளாதார ரீதியில் எவ்வாறு இணைந்து செயற்படுவது, தென்னிந்திய 5 மாநிலங்களின் தீவிர அபிவிருத்தியிலிருந்து எவ்வாறு பயன்பெறுவது என்பது குறித்து கலந்தாலோசிக்க வேண்டும். ஜி.எஸ்.பி. பிளஸ் இருப்பதால் அமெரிக்க வரி அதிகரிப்பினால் சிக்கல் இல்லை என்று சிலர் கூறுகின்றனர்.

இவ்வாண்டுடன் ஜி.எஸ்.பி. பிளஸ் நிறைவடையப் போகின்றது. ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பான புதிய முன்மொழிவுகள் முன்வைக்கப்படவுள்ளன. எனவே, புதிய சட்டத்துடன் புதிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரவுள்ளது. அதற்கமைய தற்போது ஜி.எஸ்.பி. பிளஸ் கிடைக்கப் பெறும் சுமார் 6 நாடுகள் அதனை இழக்க நேரிடும்.

பயங்கரவாரத் தடைச் சட்டம், நல்லிணக்கம் மற்றும் ஊழல் ஒழிப்பு தொடர்பில் இலங்கை என்ன செய்திருக்கின்றது என்பதையும் ஐரோப்பிய ஒன்றியம் ஆராயும். இன்னும் இரண்டு வாரங்களில் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு இலங்கை வரவுள்ளது. வந்ததன் பின்னர் நிச்சயம் இவை தொடர்பில் அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

அமெரிக்காவினால் கதவுகள் அடைக்கப்படும்போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் தகவுகள் திறக்கப்படும் என்று எவராவது எண்ணினால் அது முற்றிலும் தவறாகும். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளப்பெற்றுக் கொள்வதற்கு எந்தளவுக்கு இலங்கை போராடியது என்பதை என்னைத் தவிர இந்த நாடாளுமன்றத்தில் யாருக்கும் தெரியாது. எனவே, இவை தொடர்பில் அரசு தீர்க்கமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்." – என்றார்.

### மட்டக்களப்பில்...

யாசகம் பெற்று வாழ்ந்து வரும் 65 வயது மதிக்கத்தக்க பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது தாயுடன் வாழ்ந்து வந்த 46 வயதுடைய மனநலம் பாதிக்கப்பட்ட மகன் தாக்கி மேற்படி தாய் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்படி மகனை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திக்கோவிட்ட துறைமுகத்தில் போதைப்பொருள்கள் மீட்பு






திக்கோவிட்ட துறைமுகத்தில் 191 கிலோ 752 கிராம் ஹெரோயின் மற்றும் 671 கிலோ 452 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 7 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, போதைப்பொருள் கடத்தியதாக சந்தேகிக்கப்படும் நெடுநாள் கடற்றொழில் கப்பல் சோதனையிடப்பட்டது.

திக்கோவிட்ட துறைமுகத்திற்கு குறித்த நெடுநாள் கடற்றொழில் கப்பல் கொண்டு வரப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் நிபுணத்துவ அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட மேலதிக சோதனையின் போது மிக நுணுக்கமாக மறைத்து நாட்டிற்கு கொண்டு வர முயற்சித்த போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சந்தேக நபர்கள் மற்றும் நெடுநாள் கடற்றொழில் படகு ஆகியவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# வாக்குறுதிகளை தந்து வெற்றி பெற்ற அரசாங்கம் இன்று அலங்கோலமான அரசாங்கமாக மாறியுள்ளது

## மனோ கணேசன் தெரிவிப்பு





பொருளாதார ரீதியாக நாட்டை கட்டியெழுப்பும் செயற்பாட்டிலே தோல்வி அடைந்த இந்த அரசாங்கமானது, தேர்தல் வாக்குறுதிகளை மட்டுமே வழங்கி வெற்றி பெற்று இன்று அலங்கோலமான அரசாங்கமாக மாறியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையில் வடகொழும்பு புளூமெண்டல் வட்டாரத்தில் போட்டியிடும் ஜனநாயக மக்கள் முன்னணியின் வேட்பாளரும் முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான உடையார் சிவரஞ்சனின் வெற்றியை உறுதிப்படுத்தும் முகமாக வடகொழும்பு புளூமெண்டல் வீரமஹா காளியம்மன் கோயிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட போதே மனோ கணேசன் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.



# முக்கொம்பன் மகா வித்தியாலத்தில் சர்வதேச காடுகள் தினம் நிகழ்வுகள்

இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம்மும், கிளி ஃ முக்கொம்பன் மகா வித்தியாலயமும் இணைந்து நடத்திய சர்வதேச காடுகள் தினம் பாடசாலையில் அதிபர் ப. ஜோயல் பியசீலன் தலைமையில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

சர்வதேச காடுகள் தினத்திணை முன்னிட்டு இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கத்தினால் மணவர்கள் மத்தியில் பல்வேறு போட்டி நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இதில் வெற்றி பெற்ற மணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. மேலும், மாணவர்களால் காடுகள் பற்றிய பல்வேறு கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்க பிரதிநிதிகள், கிளிநொச்சி மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதிகாரிகள் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.














# கணித, விஞ்ஞான பாடங்களில் உயர்தரத்திற்கு அதிக மாணவர்களை உள்ளீர்க்கும் விழிப்புணர்வு

## வடக்கு, கிழக்கில் சைவ மகா சபை முன்னெடுப்பு

கணிதம் மற்றும் விஞ்ஞான பிரிவுகளில் அதிகளவு உயர்தர மாணவர்களை உள்ளீர்க்கும் முகமாக அகில இலங்கை சைவ மகா சபையினால் விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள் யாழில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மாணவர்கள் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் க.பொ.த. உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் நிலை பின் தள்ளப்பட்டு வருகின்ற சூழலில் அந்தத் துறைசார்ந்த வேலை வாய்ப்புகளில் சகோதர மொழி இனத்தவர்கள் பணிபுரிய வேண்டிய சூழல் ஏற்படுகின்றது.

இந்நிலையில் எமது மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டியதன் காரணமாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

மேலும் ஏனைய துறைகளது வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் வேலையின்மை நிலவுகின்றது. ஆனால் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கல்வி கற்கின்ற பொழுது பல்வேறு வகையான வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

இந்தக் கருப்பொருளை மையமாகக் கொண்டு விழிப்புணர்வு கருத்தரங்கு யாழில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை பொருண்மியம் நலிந்த மாணவர்களுக்கு விசேட திட்டங்களும் அகில இலங்கை சைவமாக சபையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்றைய தினம் வலிகாமம் பகுதி மாணவர்களை இலக்கு வைத்து சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரத்தை நிறைவு செய்த மாணவர்களுக்காகக் கருத்தரங்கு நடத்தப்பட்டது .

இதன்போது அகில இலங்கை சைவமாக சபையின் பொதுச் செயலாளர் பரா நந்தகுமார், சமூக செயற்பாட்டாளர் நல்லதம்பி பொன்ராசா, சமாதான நீதவான் அருள் சிவானந்தன், துறை சார்ந்த ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# போதை மாத்திரைகளுடன் இளைஞர் யாழ்ப்பாணம் நகரில் நேற்றுக் கைது!

யாழ்ப்பாண நகரில் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் யாழ மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் நேற்றைய தினம் கைதுசெய்யப்பட்டார்.

யாழ் நகர் பகுதியில் போதை மாத்திரைகளின் பரவல் அதிகரித்திருப்பதாகவும் விற்பனை செய்யப்படுவதாகவும் கிடைத்த தகவலுக்கு அமைய கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த 18 வயது இளைஞன் 10 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது 75 போதை மாத்திரைகள் அவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபரை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நல்ல மாற்றம்

# மீளப் பெற முடியாத அதிகாரப் பகிர்வு வேண்டும்.

# சமஷ்டி அடிப்படையிலான தீர்வு அவசியம்.

# ஒற்றை ஆட்சிக்குள் தீர்வு சாத்தியமே இல்லை.

- இனப் பிரச்சினை தீர்வு தொடர்பில் தமிழர் தரப்பில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் இவை. வெவ்வேறு சொல்லாடல்களில் - வாசகங்களில் - இவை அமைந்திருந்தாலும், இவை மூன்றுமே பெரும்பாலும் குறிப்பது ஒரே விடயத்தைத்தான் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

சமஷ்டி என்பதே வழங்கப்பட்ட அதிகாரத்தை மத்தி மீண்டும் பறித்தெடுக்க முடியாது என்ற அடிப்படையைத்தான் குறிப்பிடுகிறது.

சமஷ்டி முறையை ஏற்றுக் கொண்டால் அது ஒற்றையாட்சிக்கு வெளியே வந்த விடயம்தான்.

ஆயினும், தமிழர் தரப்புகளில் இந்த விடயம் வெவ்வேறு கட்சியினரால் வெவ்வேறு சொல்லாடல்களில் அவ்வாறு முன் வைக்கப்படுகின்றது. ஆனால் இவர்கள் எல்லோரும் சுட்டுவது ஒன்றுதான் என்பதே இதில் பொதிந்துள்ள அர்த்தம்.

வெவ்வேறு சொல்லாடல்களில் - வேறு வாசகங்களில் - தமிழர் தரப்புகள் கூறுகின்ற விடயத்தை ஒரே குரலில் அவர்கள் ஒன்று சேர்ந்து கூற முடியாமல் இருக்கின்றமை துரதிஷ்டவசமானது.

அவர்கள் ஒரே குரலில் இந்த விடயங்களை முன்வைப்பது தொடர்பில் - அதற்கான வாய்ப்பு வழிமுறை குறித்து - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தபோது குறிப்பிட்டு இருக்கின்றார். அது கவனிக்கத்தக்கது.

"ஒற்றையாட்சிக்கு வெளியே வந்து, சமஷ்டி முறைமைக்குக் கீழ் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தி, ஒரு தீர்வைக் காண எத்தனித்தால் வழி பிறக்கும் என்பதை நாம் (பிரதமர் மோடிக்கு) விளக்கினோம்.

"இந்த விடயங்களை அடைவதற்காகத் தமிழ்க் கட்சிகளை டில்லிக்கு வரவழைத்துப் பேசுங்கள் என்று நாங்கள் இந்தியப் பிரதமரைக் கோரினோம்." - என்று கூறியிருக்கின்றார் அவர்.

தாங்கள் மட்டுமே தனித்துத் தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிப்பவர்கள், மற்றைய தரப்புகள் இந்தியாவின் அடிமைகளாக செயல்படுகின்றனர் என்றெல்லாம் கூறிவந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தான் இப்போது தமிழர் தரப்புகளை ஒற்றையாட்சிக்கு வெளியே வந்து, சமஷ்டி முறைமையின் கீழ் இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி, ஒரு தீர்வை காண வசதியாக தமிழ் கட்சிகளை டில்லிக்கு வரவழைத்து பேசுங்கள் என்று இந்தியப் பிரதமரைக் கோரும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

தம்முடைய சாத்தியமற்ற வழிவரைபடத்தில் இருந்து வெளியே வந்து, சாத்தியமான ஒரு மார்க்கத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் தலைமை நாடுகின்றது என்பதற்கு இது ஒரு நல்ல சமிக்ஞை.

மற்றைய தமிழர் தரப்பை அரவணைக்கப் பின்நின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்போது பல தரப்புகளையும் அரவணைக்கின்றது. எல்லாத் தமிழர் தரப்புகளையும் புதுடில்லிக்கு அழைத்துப் பேசுமாறு இந்தியாவுடன் நட்புறவு கரம் நீட்டுகிறது. இவை சாத்தியப்பாடான ஒரு அணுகுமுறையை நோக்கி அக்கட்சி நகருகின்றது என்ற நல்ல விடயத்தைத்தான் காட்டுகின்றன.

உள்ளூராட்சி சபை
தேர்தல் களம்

VOTE







# புதுக்குடியிருப்பின் புனிதவளநகரில் தமிழரசுத் தேர்தல் பணிமனை திறப்பு

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு உள்ளூர்அதிகார சபையின் புனிதவளநகர் வட்டாரத்திற்குரிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் அலுவலத் திறப்புநிகழ்வும், “நாடு யாருடனும் இருக்கட்டும் நம்மூர் நமமோடு இருக்கட்டும்” என்னும் தொனிப்பொருளிலான தேர்தல் பரப்புரைக்கூட்டமும் நேற்று புனிதவளநகர் வட்டாரத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

புனிதவளநகர் வட்டார முதன்மை வேட்பாளர் அற்புதம் சற்குணதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் மாலை அணிவிக்கப்பட்டார்.

தொடர்ந்து மங்கலவிளக்கேற்றல் இடம்பெற்றது. அதனையடுத்து புனிதவளநகர் வட்டாரத்திற்கான இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தேர்தல் அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது.

இதனையடுத்து இலங்கைத் தமிழ் அரசுக்கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தவர்களால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

மேலும் இந் நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், புனிதவளநகர் வட்டார இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முதன்மை வேட்பாளர் அற்புதம் சற்குணதாஸ், புனிதவளர் வட்டார இலங்கைத் தமிழரசுக்கட்சி மேலதிக வேட்பாளர் திருமதி.தயாபரன் மேரி றோசலீன், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முப்புரம் வட்டார முதன்மை வேட்பாளர் சிவபாதம் குகநேசன், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் கோம்பாவில் வட்டார முதன்மை வேட்பாளர் சந்திரசேகரம் கிருபாகரன், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.













# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# தம்பட்டையில் உள்ளூராட்சி தேர்தல் பரப்புரை

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடும் பிரபல சமூக செயற்பாட்டாளரும் தொழிலதிபருமான சுந்தரலிங்கம் சசிகுமார் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் தேர்தல் பரப்புரைகள் ஆரம்பமாகியுள்ளன.

தம்பட்டையில் தேர்தல் பரப்புரை நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

எஸ்.பாஸ்கரன் உள்ளிட்ட வேட்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் நடைபெற்ற அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

தலைமை வேட்பாளர் சு.சசிகுமார் மற்றும் பல வேட்பாளர்களும் உரையாற்றினர்.

இதில் பல பொதுமக்கள் கலந்து கொண்டு எதிர்கால திட்டங்கள் பற்றி கலந்துரையாடினார்கள்.







# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## சாவகச்சேரி நகர மற்றும் பிரதேச சபைகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கைப்பற்றும்

### அக்கட்சியின் பிரமுகர் விஜயேந்திரன் திட்டவட்டம்



(த.சுபேசன்)

சாவகச்சேரி நகர மற்றும் பிரதேச சபைகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கைப்பற்றும் என சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் வீ.விஜயேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரியில் இடம்பெற்ற தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு இப்போதும் சாதகமாக நிலையே உள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சாவகச்சேரி நகரசபையில் அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தோம்.

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் மாநகரசபை, நல்லூர் பிரதேசசபை ஆகிய சபைகளில் இரண்டாம் இடங்களைப் பெற்றிருந்தோம்.

2023ஆம் ஆண்டு உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான வேட்புமனு கோரப்பட்டிருந்த போதிலும் துரதிர்ஷ்டவசமாக தேர்தல் இடம்பெறவில்லை. அன்று தேர்தல் இடம்பெறிருந்தால் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அனைத்துச் சபைகளிலும் அதிக ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கும்.

அதன்பின்னர் நாட்டில் ஓர் அலை ஏற்பட்ட போதிலும் 6மாத காலங்களில் மக்கள் உண்மைத் தன்மையை உணர்ந்து விட்டனர்.

மக்கள் சரி எது, தவறு எது என்பதனை உணர்ந்து மீளவும் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

தென்மராட்சியைப் பொறுத்தவரை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், கட்சியின் முன்னாள் நகரசபை உறுப்பினர்கள், ஜனநாயக தமிழரசுக் கட்சி உறுப்பினர்களின் பலத்த ஒத்துழைப்பு உள்ளது.

இவ்வாறான ஒரு நிலைமையில் தென்மராட்சியின் இரண்டு சபைகளையும் இலகுவாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கைப்பற்றும்.

தேர்தல் முடிவுகளின் பின்னர் தகுதியானவர்கள் தவிசாளர் பதவிக்கு கட்சித் தலைமையால் பரிந்துரைக்கப்படுவார்கள்.

– என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## அரச நிறுவன பிரதானிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைப்பு




அரச நிறுவனங்களின் பிரதானிகள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 8 ஆம் திகதி இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்தது.

அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இந்த கலந்துரையாடலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலப்பகுதியில் அரச சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

# அமெரிக்க தீர்வை வரி தொடர்பில் அடுத்த வாரம் கலந்துரையாடல்




அமெரிக்க தீர்வை வரி தொடர்பில் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்தின் உறுப்பினர்கள் ஆகியோருக்கு இடையில் அடுத்த வாரம் சந்திப்பு இடம்பெறவுள்ளது.


இதன்போது பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர், பேராசிரியர் அனில் ஜயந்த அரசாங்கத்தின் யோசனைகளை முன்வைக்கவுள்ளதாக தெரிவித்தார்.

இந்த குழு நாளாந்தம் கூடி இதற்கான யோசனைகளை தயாரிப்பதாக பிரதியமைச்சர் கூறினார்.

குழுவின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினர்.

புதிய தீர்வை வரியால் ஏற்றுமதியாளர்கள் மற்றும் அந்நிய செலாவணிக்கு ஏற்படவுள்ள பாதிப்பு தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்காக 44 வீத தீர்வை வரியை விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மதுபான விற்பனை நிலையங்களுக்கு சீல்

சில்லறை விலையில் மதுபானத்தை விற்பனை செய்த குற்றச்சாட்டில் 02 விற்பனை நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்தது.

பத்தரமுல்ல மற்றும் பொரளை ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட சோதனையின் போது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியமைக்காக 2 விற்பனை நிலையங்களுக்கும் இவ்வாறு சீல் வைக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்தது.

# தபால் ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து

அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறைகளும் நேற்று முதல் இரத்து செய்யப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு பணிகளுக்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நிறைவடையும் வரை விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பிரதி தபால் மாஅதிபர் பிரேமச்சந்திர ஹேரத் தெரிவித்தார்.

இன்று முதல் வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்படவுள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23, மற்றும் 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

இந்த தினங்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்களுக்கு ஏப்ரல் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது.

# உள்ளூராட்சி தேர்தல் செயலியில் இதுவரை 597 முறைப்பாடுகள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை அறிவிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட செயலியில் நேற்று வரை 597 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

புதிய செயலியை அறிமுகம் செய்து 02 வாரங்களில் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என ஆணைக்குழு கூறியது.

இதில் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைப்பதற்காக நுனுசு என்ற புதிய செயலி கடந்த மாதம் 22 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது.



# பூசா சிறைச்சாலையில் கொலை செய்யப்பட்ட கைதி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

பூசா சிறைச்சாலையில் கைதியொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார அறிவுறுத்தலின் பேரில் விரிவான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி காலை பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரின் மரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகள் நடத்தி வருகின்றனர்.

இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க தேவையான ஏற்பாடுகளை செய்ய நீதி அமைச்சு மற்றும் சிறைச்சாலைகள் திணைக்கள சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், அனைத்து விசாரணைகளையும் விரைவாக முடித்து, சம்பந்தப்பட்ட குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.






# பாம்பன் புதிய ரயில் பாலத்தை திறந்துவைத்தார் பிரதமர் மோடி

பாம்பன் – மண்டபம் இடையே 550 கோடி ரூபா மதிப்பில் கட்டப்பட்ட இந்தியாவின் முதல் செங்குத்து தூக்கு ரயில் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார்.

இந்தியாவுடன் இராமேஸ்வரம் தீவை இணைக்கும் வகையில் மண்டபம் கடற்கரையிலிருந்து, பாம்பன் கடற்கரை வரையிலும் கடலில் ரயில் பாலமும் அதன் நடுவே கப்பல் கடந்து செல்ல தூக்குப் பாலம் ஆங்கிலேயே ஆட்சி காலத்தில் கட்டப்பட்டு 1914 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இதுவே இந்தியாவில் கட்டப்பட்ட முதல் நீளமான கடல் பாலம் ஆகும்.

பாம்பன் ரயில் தூக்குப் பாலத்தில் அடிக்கடி ஏற்பட்ட தொழில்நுட்பப் பிரச்சினைகள் மற்றும் விரிசல் விழுந்ததாலும், இந்த பாலம் அருகிலேயே புதிய ரயில் பாலம் கட்டும் பணிளுக்கு 2019 ஆம் ஆண்டு ரயில்வே மானியக் கோரிக்கைகளின் போது பாம்பன் புதிய ரயில் பாலத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. 01.03.2019 இல் பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார். பின்னர் 11.08.2019 இல் பாம்பனில் புதிய ரயில்வே பாலம் கட்டுவதற்காகப் பூமி பூஜையுடன் பணிகள் துவங்கின.

ரயில்வே நிர்வாகம் 31.09.2021 இற்குள் புதிய ரயில்வே பாலத்தின் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் பாம்பன் கடற்பகுதியில் அவ்வப்போது ஏற்படும் கடல் சீற்றம், புயல் உள்ளிட்ட வானிலை மாற்றம் மற்றும் கொரோனா பரவலால் நிர்ணயிக்கப்பட்ட செப்டம்பர் 2021 இற்குள் பணிகளை முடிக்க முடியவில்லை, செப்டம்பர் 2024 இல் பணிகள் நிறைவடைந்தது.

ராமநவமி நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியளவில் இலங்கை பயணத்தை நிறைவு செய்துவிட்டு மண்டபம் ஹெலிபேட் தளத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி சென்றார். அங்கிருந்து கார் மூலம் பாம்பன் சாலை பாலத்திற்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடி 550 கோடி ரூபாசெலவில் அமைக்கப்பட்டுள்ள பாலத்தை கொடி அசைத்து வைத்து திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார். அப்போது, பாம்பன் புதிய ரயில் பாலத்தில் மண்டபத்திலிருந்து புறப்பட்டு வந்த சிறப்பு ரயில் இராமேஸ்வரத்துக்கு சென்றார்.

பின்னர் ரிமோட் மூலம் பிரதமர் நரேந்திர மோடி பாம்பன் புதிய ரயில் பாலத்தில் உள்ள செங்குத்து பாலத்தை மேலே உயர்த்தி கடலோர காவல்படைக்கு சொந்தமான கப்பல் பாம்பன் பாலங்களை கடந்து செல்வதையும், பாலத்தின் செயல்பாடுகளையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்விணி வைஷ்ணவ், மத்திய செய்தி ஒலிபரப்பு இணையமைச்சர் எல்.முருகன், தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து சாமி தரிசனம் செய்வதற்காக கார் மூலம் பாம்பன் சாலைப் பாலத்திலிருந்து இராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோயிலுக்கு சென்றார்.









# தமிழகத்துக்கு மும்மடங்கு நிதி தந்தும் சிலர் அழுகின்றனர்: மோடி விமர்சனம்

தமிழகத்துக்கான ஒதுக்கீடுகள் அதிகரித்த போதிலும் சிலர் நிதிக்காக அழுகின்றனர் என்று யாருடைய பெயரையும் வெளிப்படையாக குறிப்பிடாமல் பிரதமர் மோடி தி.மு.கவை விமர்சித்துள்ளார்.

மேலும், தி.மு.க. தலைவர்கள் தங்களின் கடிதங்களில் தமிழில் இல்லாமல், ஆங்கிலத்தில் கையெழுத்திட்டதையும் அவர் விமர்சித்துள்ளார்.

இராமேஸ்வரத்தில் பாம்பன் – மண்டபம் இடையே கட்டப்பட்டுள்ள இந்தியாவின் முதல் செங்குத்து தூக்கு ரயில் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்து, நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

அங்கு நடந்த கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில்,

“கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் மோடி அரசு தமிழகத்துக்கு நிதி அளித்து வருகிறது. இது கடந்த ஐக்கிய முற்போக்கு அரசு ஆட்சியை விட மூன்று மடங்கு அதிகம். அப்போது தி.மு.க. யு.பி.ஏ. அரசில் அங்கம் வகித்தது. தமிழகத்தின் ரயில்வே பட்ஜெட்டும் 7 மடங்கு அதிகரித்துள்ளது. சிலர் காரணம் இல்லாமல் அழுவதையே ஒரு வழக்கமாக கொண்டுள்ளனர். அவர்கள் அதைத் தொடர்ந்து செய்கின்றனர்.

தமிழகத்தைச் சேர்ந்த எம்.பிகள் அவர்களின் மொழிப் பெருமையைப் பற்றி பேசிக்கொண்டே இருக்கின்றனர். ஆனால் எனக்கு அவர்கள் கடிதம் எழுதும் போது அதில் ஆங்கிலத்திலேயே கையெழுத்திடுகின்றனர். ஏன் அதில் தமிழில் கையெழுத்திடுவதில்லை? அவர்களின் மொழிப் பெருமை அப்போது எங்கே போனது?

கடந்த 2014 ஆம் ஆண்டுக்கு முன்பாக ஒவ்வொரு ஆண்டும் ரயில்வே பட்ஜெட்டில் தமிழகத்துக்கு 900 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. அப்போது யு.பி.ஏ. கூட்டணியில் யார் முக்கியத் தலைவர்களாக இருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இன்று ரயில்வே பட்ஜெட்டில் தமிழகத்துக்கு 6,000 கோடி ரூபா ஒதுக்கப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள எனது ஏழை எளிய சகோதர, சகோதரிகள், மத்திய அரசின் உதவி மூலமான திட்டத்தின் கீழ் 12 லட்சம் பக்கா வீடுகளைப் பெற்றுள்ளனர். நாடுமுழுவதும் 12 கோடி குடும்பங்கள் தங்களின் வீடுகளில் குடிநீர் இணைப்பு பெற்றுள்ளனர். இதில், 1.1 கோடி குடும்பங்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். தமிழகத்தின் எனது தாய்மார்களும், சகோதரிகளும் முதல் முறையாக இந்த வசதியைப் பெற்றுள்ளனர்.

மருத்துவப் படிப்புகளை தமிழில் தொடங்க வேண்டும் என்று நான் தமிழக அரசை வலியுறுத்துகிறேன். அதன் மூலம் ஏழைக் குடும்பத்து குழந்தைகளின் மருத்துவர் கனவு நிறைவேறும். நமது நாட்டுக் குழந்தைகள் மருத்துவப் படிப்புக்காக வெளிநாட்டுக்குச் செல்லக்கூடாது என்பதை உறுதி செய்ய நாங்கள் முயற்சி மேற்கொள்கிறோம். கடந்த 10 ஆண்டுகளில் தமிழகம் 11 புதிய மருத்துவக் கல்லூரிகளைப் பெற்றுள்ளது.

மீனவர்களின் பாதுகாப்பும், நல்வாழ்வும் இந்த அரசின் முன்னுரிமையாக உள்ளது. இந்திய அரசின் அர்ப்பணிப்பு மிக்க முயற்சிகளால், கடந்த 10 ஆண்டுகளில் 3, 700 மீனவர்கள் இலங்கையில் இருந்து வெற்றிகரமாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு மட்டும் 600 அதிகமான மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். நமது மீனவர்களில் சில மரண தண்டனைக்கு ஆளாகியுள்ளார்கள். என்றாலும் பெரும்பாலான மீனவர்கள் பாதுகாப்பாக நாடு திரும்புவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்தோம்.” என்றார்.

# அமெரிக்காவுடனான பேச்சு அர்த்தமற்றது: ஈரான் அறிவிப்பு




இரு நாடுகளுக்கும் இடையே அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில், அமெரிக்காவுடன் அதன் அணுசக்தி திட்டம் குறித்து நேரடி பேச்சுவார்த்தை நடத்துவதற்கான வாய்ப்பை அர்த்தமற்றது என்று ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்சி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமெனிக்கு அனுப்பிய கடிதத்தில், தெஹ்ரான் அணு ஆயுதங்களை வாங்குவதைத் தடுக்கும் நோக்கில் இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெறும் என்று நம்புவதாக ட்ரம்ப் கூறியதை அடுத்து ஈரான் வெளிவிகார அமைச்சரின் இந்தக் கருத்துக்கள் வந்துள்ளன.

கடந்த வாரம் தனது கருத்தை மீண்டும் வலியுறுத்திய ட்ரம்ப், ஈரான் தனது அணுசக்தி திட்டம் குறித்து நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் அல்லது குண்டுவீச்சுக்கு உட்பட வேண்டும் என்ற எச்சரித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று இது குறித்து பதிலளித்துள்ள அப்பாஸ் அரக்சி, "பேச்சுவார்த்தைகளை நீங்கள் விரும்பினால், அச்சுறுத்துவதன் பயன் என்ன?", பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுப்பதில் வொஷிங்டனின் நேர்மையையும் அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும், ஐ.நா. சாசனத்தை மீறி, தொடர்ந்து பலத்தைப் பயன்படுத்துவதை அச்சுறுத்தும் மற்றும் முரண்பாடான நிலைப்பாடுகளை ஏற்கும் ஒரு தரப்பினருடன் நேரடி பேச்சுவார்த்தைகள் அர்த்தமற்றவை என்று ஈரானிய வெளிவிகார அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ட்ரம்பின் போர் அச்சுறுத்தலுக்கு சனிக்கிழமை பதிலளித்த இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் தலைவர் ஹொாசைன் சலாமி, நாடு போருக்கு தயாராக இருப்பதாகக் கூறினார்.

2018 ஆம் ஆண்டில், ஜனாதிபதியாக தனது முதல் பதவிக் காலத்தில், ஈரானுக்கும் ஐக்கிய நாடுகள் பாது காப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்களுக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தமான கூட்டு விரிவான செயல் திட்டத்தை ட்ரம்ப் இரத்து செய்தார்.

இதன் மூலம் ஈரானின் அணுசக்தித் திட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஈடாக அந்நாட்டின் மீதான தடைகளைத் தளர்த்த முடிந்தது.

எனினும், ஈரான் அணுசக்தி தளங்களை ஆய்வு செய்யும் சர்வதேச அணுசக்தி அமைப்பின் கூற்றுப்படி, ஈரான் ஒப்பந்தத்தின் கீழ் அதன் உறுதிமொழிகளில் இருந்து பின்வாங்கியுள்ளதாக கூறப்படுகிறது.





# இங்கிலாந்து எம்.பி.க்களுக்கு இஸ்ரேலுக்குள் நுழைய தடை

இங்கிலாந்தின் இரு தொழிற்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை நாட்டிற்குள் நுழைய அனுமதி மறுத்து, அவர்களை தடுத்து வைத்ததற்காக இஸ்ரேலிய அதிகாரிகளை பிரித்தானிய வெளிவிகாரச் செயலாளர் டேவிட் லாமி விமர்சித்துள்ளார்.

இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் ஆழ்ந்த கவலைக்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம் இரு எம்.பி.க்களையும் தொடர்பு கொண்டு ஆதரவை வழங்குவதாகவும் கூறியுள்ளார்.

இஸ்ரேலுக்கு எதிராக வெறுக்கத்தக்க பேச்சைப் பரப்ப அவர்கள் முயன்றமையினால் அப்திசம் மொஹமட் மற்றும் யுவான் யாங் ஆகியோருக்கு நுழைவு மறுக்கப்பட்டதாக இஸ்ரேலிய குடிவரவு அமைச்சு ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஏர்லி மற்றும் உட்லியின் எம்.பி.யான யாங் மற்றும் ஷெஃபீல்ட் சென்ட்ரலின் எம்.பி.யான மொஹமட் ஆகியோர் கடந்த சனிக்கிழமை பிற்பகல் இரண்டு உதவியாளர்களுடன் லண்டன் லூடன் விமான நிலையத்திலிருந்து திரும்பினர்.

இஸ்ரேலிய குடியேற்ற ஆணையம், உள்துறை அமைச்சர் மோஷே அர்பெல் நான்கு பயணிகளையும் விசாரித்த பின்னர் அவர்களுக்குள் நுழைய மறுத்ததாகக் கூறியது.

இந்தக் குழு நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றதாக பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆனால், இஸ்ரேலின் குடியேற்ற ஆணையம் இந்தக் கூற்றை மறுத்து, அந்தக் குழுவை எந்த இஸ்ரேலிய அதிகாரியும் அங்கீகரிக்கவில்லை என்று தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 07.04.2025




இன்று சலிப்பூட்டும் நாளாக இருக்கும். என்றாலும், திட்டமிட்டு புத்திசாலித் தனத்துடன் செயலாற்றினால் உங்கள் முயற்சியில் வெற்றி நிச்சயம்.

பணியில் இன்னல்களை சந்திப்பீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் நீங்கள் மேற்கொண்ட பணிகளை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் தேவையற்ற விவாதங்கள் ஏற்படாமலிருக்க அமைதி காக்க வேண்டும். உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உபரி பணத்தை முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். என்றாலும் நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். தலைவலி மற்றும் முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். நேரத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன் படுத்துவீர்கள். உங்களின் சிறந்த தகவல் பரிமாற்றம் பிறரை காந்தம் போல கவர்ந்திழுக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் பணிக்கான நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருப்பீர்கள்.

நிதியைப் பொறுத்த வரை இன்று சுதந்திரமான நிலை காணப்படும். எதிர்கால நலனுக்கான பயனுள்ள நிதி சம்பந்தமான முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படுகின்றது. பெரிய அளவிலான ஆரோக்கிய குறைபாடுகள் ஏதும் இருக்காது.




இன்று எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளவேண்டும். இன்று நீங்கள் உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும்.

பணியிடச் சவால்களை சந்திக்க பொறுமை அவசியம். பணியில் வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சிகள் செய்ய வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அனுசரணையான போக்கு தேவை. உங்கள் துணையை நகைச்சுவையான அணுகுமுறையோடு அணுகி அவரை மகிழ்விக்க வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். சிறப்பாக திட்டமிட முயலுங்கள்.




இன்று உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். இறைவழிபாடு, ஸ்லோகம் கூறுவது ஆன்மீக ஈடுபாடு ஆறுதலைத் தரும். இன்று அதிக பொறுப்புகளும் மன உளைச்சல்களும் இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் செயல் திறன் உங்களுக்கு திருப்தியை அளிக்காது. பணிச் சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்காது.

குழப்பமான மன நிலை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல உறவுமுறையை பராமரிக்க மாட்டீர்கள். இதனால் இருவருக்கும் இடையிலான தகவல் பரிமாற்றம் பாதிக்கப்படும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.




இன்று ஆன்மீகத்தில் ஈடுபடலாம். அமைதியாக இருக்க ஒரே வழி பிரார்த்தனை ஆகும்.

இன்று பணிச் சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் மகிழ்ச்சி பாதிப்படையும்.

பணப் புழக்கும் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகளைச் சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

தொடை மற்றும் கால் வலியால் அவதிப்படுவீர்கள். உடற்பயிற்சி உங்களை திடமாக வைத்திருக்க உதவும்.




இன்று பரபரப்பாக காணப்படுவீர்கள். உங்கள் வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள். உங்கள் நலனை மேம்படுத்தும் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

பணியிடத்தில் சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் செயல் திறன் அதிகரித்துக் கொள்வதற்கான புதிய வழிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடனான அன்புப் பிணைப்பு வலுப்பெறும் வகையில் அன்பை வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இருவரும் மகிழ்ச்சியான இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி நிலைமை திருப்தி அளிக்கும். நீண்ட கால நிலுவை தொகைகள் உங்கள் கைக்கு வந்து சேரும்.




திட்டமிட்ட முறையான அணுகுமுறை மூலம் இன்றைய நாளை மதிப்பு மிக்க தாக்குவீர்கள். உங்கள் சிறந்த தகவல் பரிமாற்ற திறன் மூலம் சிறந்ததை சாதிப்பீர்கள். உங்கள் முயற்சியில் வெற்றி பெற புத்திசாலித் தனத்தை பயன் படுத்துங்கள்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் நல்லுறவு காணப்படும். உங்கள் நேர்மையான அணுகுமுறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சி, இனிமை, நகைச்சுவை என உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே அன்பு அதிகரிக்கும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்கும். சிறிய அளவிலான கடன்கள் வாங்கி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.




இன்று தேவையற்ற மனக் கவலைகள் காணப்படும். அதனை தவிர்க்கவும். நேர்மையான எண்ணங்களை மேற்கொள்ளுங்கள்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். இது ஏற்படாமல் இருக்க கவனம் தேவை.

மனக் குழப்பங்கள் அதிகம் காணப்படுவதால் அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள நீங்கள் உங்கள் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டும்.

இன்று நிதிவளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. சில இழப்புகள் காரணமாக ஏமாற்றத்தை சந்திப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பது கடினம். கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 07.04.2025




இன்று அமைதியும் கட்டுப்பாடும் தேவை. முடிவுகள் எடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்கவும். பிரார்த்தனை மற்றும் நல்ல இசை மன திற்கு ஆறுதலும் திருப்தியும் அளிக்கும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்பு காரணமாக பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். பணியிடத்தில் அசௌகரியம் காணப்படும்.

உங்கள் துணையிடம் அகந்தை போக்கை தவிர்க்க வேண்டும். இதனால் உறவு வலுப்படும். உங்கள் துணையுடன் அனுசரித்து போக வேண்டும்.

இன்று பண வரவுக்கு உகந்த நாள் அல்ல. பொறுப்புகள் அதிகமாக இருப்பதன் காரணமாக இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்கு வருத்ததை அளிக்கும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். லாபங்கள் அதி கரிக்கும். புத்திசாலிதனத்தை பயன் படுத்தினால் வெற்றி நிச்சயம்.

உங்களின் நம்பகமான சிறந்த பணி காரணமாக நற்பெயர் அதிகரிக்கும். உங்கள் திறமைகள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இருவரிடையே காணப்படும் பிணைப்பும் அன்பை பகிர்ந்து கொள்ளும் தன்மை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக காணப்படுகின்றது. லாபகராமான முதலீட்டிற்கான முயற்சி உங்களுக்கு நல்ல பலனைத் தரும். இன்று தேக ஆரோக்கியம் சிறந்து காணப்படும். இன்று இன்பமாக இருப்பதன் காரணமாக ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுக்கலாம். சமயோசிதமாக செய லாற்றலால் இன்று உற்சாகமாக இருக்க லாம்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் மேலதிகாரியிடமிருந்து எதிர்பாராத ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவர்க்கும் இடையே புரிந்துணர்வு அதிகரிக்கும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் சிறந்து காணப்படும். மனம் மற்றும் உடல் ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்று உற்சாகமான சூழ்நிலை காணப்படும். என்றாலும் எச்சரிக்கை யுடன் இருக்க வேண்டும். சரியாகத் திட்டமிட்டால் நற்பலன்களைக் காண லாம்.

பணியிடத்தில் உங்கள் சக பணி யாளர்களுடன் பிரச்சினைகள் உண்டாகும். பொறு மையுடன் இருந்தால் அதனை சமாளித்து உங்கள் பணிகளை ஆற்றலாம்.

தகவல் பரிமாற்றத்தில் இருக்கும் குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேற்றுமை காணப்படும். நல்ல புரிந்துணர்வு ஏற்பட வேறுபாடு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.


இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. பணப்பற்றாக்குறை காணப்படும்.



## மின்னல் தாக்கம் குறித்து எச்சரிக்கை

சபரகமுவ, மத்திய, வட-மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங் கள் மற்றும் முல்லைத்தீவு, வவுனியா, குருநாகல் மற்றும் ஹம்பாந் தோட்டை மாவட்டங்களுக்கு கடுமை யான மின்னல் தாக்கம் ஏற்படுவதற் கான எச்சரிக்கையை வளிமண்டல வியல் திணைக்களம் வெளியிட்டுள் ளது.

மின்னல் தாக்கம் ஏற்படும் போது பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட் டுக்கொள்ளப்படுகிறார்கள்.



## யாழில் ஒரே தடவையில் 3 கன்றுகளை ஈன்ற பசு

பசுவொன்று 3 கன்றுகளை ஈன்ற அரிய சம்பவமொன்று யாழ்.வடம ராட்சியில் பதிவாகியுள்ளது.

வடமராட்சி - உடுப்பிட்டி இலக்கணா வத்தை விவசாயி ஒருவரின் பசுவே இவ்வாறு 3 கன்றுகளை ஈன்றுள்ளது.

பொதுவாக பசுக்கள் ஒன்று அல்லது இரண்டு கன்றுகளை ஈனும். எனி னும் ஒரே தடவையில் மூன்று கன்றுக ளைப் பிரசவிப்பதென்பது அபூர்வ மான நிகழ்வாக கருதப்படுகின் றது.

கன்றுகளை ஈன்ற பசுவையும்



கன்றுகளையும் பொதுமக்கள் ஆச்ச ரியத்துடன் பார்த்து வருகின்ற னர்.